# மான்மின் செய்திகள்
# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com



## இஸ்ரேலின் 70வது ஆண்டுவிழா கொண்டாட்ட நிகழ்ச்சிகளும், கிரிஸ்டல் இசை திருவிழாவும்


1


2


3


4


5


6


7


8

சரித்திர பார்வையில் 2018ம் ஆண்டு இஸ்ரேலிய மக்களுக்கு ஒரு அர்த்தமுடைய ஆண்டாகும். ஏறக்குறைய 1,900 ஆண்டுகளாக உலகமெங்கிலும் சிதறிப்போன யூதர்கள் மறுபடியும் யூதர்களுக்குரிய தேசத்தை மே 14, 1948ம் ஆண்டு மறுசீரமைத்தார்கள். இந்த ஆண்டு 2018ல் அவர்கள் 70வது ஆண்டுவிழாவை கொண்டாடினார்கள். இஸ்ரேலின் உதவும் கரங்கள் கூட்டமைப்பும், ஜெர்மனியின் வாழ்வாதார அமைப்பும் இஸ்ரேல் அரசாங்க உதவியோடு 70வது ஆண்டுவிழாவை முன்னிட்டு ஒரு கொண்டாட்ட நிகழ்ச்சியை நடத்தினார்கள். இஸ்ரேல் பிரதமர் ரியுவன் ரிவ்லின் அவர்களின் காணொளி வாழ்த்துச் செய்தி ஒளிபரப்பப்பட்டது. அதன்பிறகு முக்கிய பேச்சாளர்கள் வாழ்த்துச் செய்திகளை வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சி காட் டிவி மற்றும் ஜெர்மனியைச் சார்ந்த ஒரு தொலைக்காட்சி அலைவரிசை மூலமாக நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.

மே 13ம் தேதி அன்று, மான்மின் தலைமை சபையின் ஊழியக்குழுவினர்கள் VIP விருந்தினர்களுக்கான துவக்க நிகழ்ச்சியில் பங்குப் பெற்றனர். அது அறிவர். ஜோராக் லீ அவர்களின் 2009 இஸ்ரேல் ஒருங்கிணைந்த படைமுயற்சி கூட்டம் நடைபெற்ற எருசலேமிலுள்ள சர்வதேச கன்வென்ஷன் மையத்தில் நடைபெற்றது. மே 14, 15ம் தேதிகளில் நம்முடைய ஊழியக் குழுவினர்கள் பாராளுமன்றத்திற்கு VIP கூட்டங்களில் பங்குப்பெற அழைக்கப்பட்டிருந்தார்கள். GCNனின் இயக்குனர் மூப்பர் ஜானி கிம், வாழ்த்து செய்தியை வழங்கி, அறிவர். லீ அவர்களின் ஊழியத்தைப் பற்றி பேசினார்.

### ஊழியக்குழுவினரின் கலைநிகழ்ச்சிகள் மக்களால் நல்ல வரவேற்பை பெற்றது

மே 15 அன்று மாலையில், சுல்தான் குளம் என்ற திறந்தவெளி அரங்கத்தில் வாழ்வின் திருவிழா என்ற முடிவு இசை நிகழ்ச்சி நடைபெற்றது. மான்மின் கலைநிகழ்ச்சி குழுவைச் சார்ந்த வல்லமை ஆராதனை நடனக்குழு கொரிய பாரம்பரிய விசிறி நடனத்தை காண்பித்தார்கள். அங்கு குடியிருந்த மக்கள் நிறுத்தாமல் தொடர்ந்து மகிழ்ச்சியோடு எழுந்து நின்று கைதட்டினார்கள் (படம் 1 முதல் 3).

அங்கு இருந்த பார்வையாளர்களில் அநேகர் நாங்கள் பார்த்ததிலேயே மான்மின் கலைநிகழ்ச்சிகள் சிறப்பிலும் மிகவும் சிறந்த ஒன்று, இதற்கு முன்பு இப்படிப்பட்டதொரு கலைநிகழ்ச்சிகளை பார்த்ததில்லை என்றார்கள். அதன்மூலம் பரலோகத்தை உணர்ந்தார்கள். மே 12 அன்று, 2018 கிரிஸ்டல் இசை திருவிழாவானது கிரிஸ்டல் ஃபோரம் (இஸ்ரேலிய போதகர்கள் சங்கம்) மற்றும் உதவும் கரங்கள் கூட்டமைப்பின் சார்பில் நடைபெற்றது. அந்த நிகழ்ச்சி GCN, TBN ரஷ்யா, CNL, இன்விக்டரி மற்றும் CMTN மூலமாக 170க்கும் மேற்பட்ட நாடுகளில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.

இந்த இசை திருவிழா ஹைஃபாவில் உள்ள சர்வதேச கன்வென்ஷன் மையத்தில் நடைபெற்றது. அதில் இஸ்ரேல், அமெரிக்கா, ரஷ்யா, போலாந்து, லாட்வியாவிலிருந்து வந்திருந்த 1,300க்கும் மேற்பட்ட மக்கள் பங்குப்பெற்றனர். ஹைஃபாவின் துணை ஆளுநர் யுலியா ஷ்ட்ரெய்ம் பங்குப்பெற்றார். பாராளுமன்றத்தின் துணை பேச்சாளர் டாலி ப்ளஸ்கொவ் உள்பட பல பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களின் காணொளி வாழ்த்துச் செய்தியை அனுப்பினார்கள்.

உயர்திரு. ஆண்ட்ரி கஷிரோவ்ஸ்கி, உதவும் கரங்கள் கூட்டமைப்பின் தலைவர் மற்றும் போதகர் ஒரேன் லிவ் அரி (மகிமையின் ராஜா திருச்சபை, எருசலேம்) இருவரின் வரவேற்பு செய்தியோடு நிகழ்ச்சி துவங்கியது. பார்வையாளர்களுக்கு மூப்பர் ஜானி கிம் வாழ்த்து செய்தி வழங்கினார். அவர் தம்முடைய வாழ்த்து செய்தியில் இஸ்ரேல் தேசத்தின் 70வது ஆண்டுவிழாவிற்கு வாழ்த்துதல் தெரிவித்து, அறிவர். ஜேராக் லீ அவர்கள் சார்பாக இஸ்ரேல்மேல் அறிவர். லீ வைத்துள்ள அன்பை தெரிவித்தார் (படம் 8).

மான்மின் திருச்சபையின் கலைநிகழ்ச்சி குழுவின் துணைத் தலைவர் துதி ஆராதனை நடத்துனர் ரோஸ் ஹான் அவர்கள் வல்லமை ஆராதனை நடனகுழுவினரோடு இணைந்து, பல்வேறு வகையிலான கலைநிகழ்ச்சிகளை இரண்டு முறை காண்பித்தார்கள். துதி ஆராதனை நடத்துனர் ஹான் அவர்களின் பாடல்கள் பார்வையாளர்களின் இருதயத்தை அசைத்தது; குறிப்பாக, அவள் துதித்தபொழுது, மக்களும் இணைந்து துதித்தார்கள்; புது பெலனையும் ஆறுதலையும் பெற்றுக்கொண்டார்கள். வல்லமை ஆராதனை நடனக் குழுவினர்களின் விசிறி நடனத்தின் அழகு பார்வையாளர்களை பரவசப்படுத்தியது. மேலும், இஸ்ரேலிய பாரம்பரிய நடனம் மற்றும் ஆராதனை வேளையில் காண்பித்த நடனம் மக்களை மகிழ்ச்சியால் நிரப்பியது (படம் 4 மற்றும் 5).

குறிப்பாக, இஸ்ரேலின் 70வது ஆண்டு விழாவை கொண்டாடும் விதமாக துதி ஆராதனை நடத்துனர் ரோஸ் ஹான் அவர்கள் இஸ்ரேல் தேசத்தின் தேசிய பாடலைப் பாடினபொழுது, பங்குப்பெற்ற ஒவ்வொருவரும் எழுந்து நின்று, ஒருமித்து பாடினார்கள். கூடுதலாக, பிரசித்திப்பெற்ற இஸ்ரேலிய சுவிசேஷக பாடகர் ஜோஸ்வா ஆரோன், மற்ற இஸ்ரேலிய பாடகர்கள் மற்றும் அமெரிக்கா, ரஷ்யா, லாட்வியாவிலிருந்து வந்தவர்களும் சிறப்பான கலைநிகழ்ச்சிகளை காண்பித்தார்கள் (படம் 6 மற்றும் 7).

மே 18 அன்று, எருசலேமிலுள்ள மகிமையின் ராஜா திருச்சபையில் பெந்தெகொஸ்தே கூட்டம் நடைபெற்றது. மான்மின் குழுவினர்களின் கலைநிகழ்ச்சிக்குப் பின்பு, மூப்பர் ஜானி கிம், “பரிசுத்த ஆவியின் கிரியை” என்ற தலைப்பில் அப்போஸ்தலர் 1:2–4ம் வசனத்தின் அடிப்படையில் செய்தியை பிரசங்கித்தார்.

# தேவனுக்கே மகிமை!

**“உம்முடைய துவக்கம் அற்பமாயிருந்தாலும், உம்முடைய முடிவு சம்பூரணமாயிருக்கும்”**
**[யோபு 8:7]**



**அறிவர். ஜேராக் லீ,**
**தலைமை போதகர், மான்மின் மத்திய திருச்சபை**

- தலைமை போதகர், இயேசு கிறிஸ்துவின் ஒருங்கிணைந்த பரிசுத்த திருச்சபைகள்
- நிரந்தர தலைவர், உலக கிறிஸ்தவ எழுப்புதல் ஐக்கிய ஸ்தாபனம்
- ஸ்தாபகர் & அவைத்தலைவர், உலக கிறிஸ்தவ அலைவரிசைகள் குழுமம் (GCN)
- ஸ்தாபகர் & அவைத்தலைவர், உலக கிறிஸ்தவ மருத்துவர்கள் குழுமம் (WCDN)
- ஸ்தாபகர் & அவைத்தலைவர், மான்மின் சர்வதேச வேதாகம கல்லூரி (MIS)
- ஸ்தாபகர் & அவைத்தலைவர், சர்வதேச பரிசுத்த இறையியல் கல்லூரி
- ஊழியத்தின் முனைவர், தெய்வீகத்தின் (Divinity) கௌரவ டாக்டர் பட்டங்களை உலக நாடுகளின் பிரசித்திப்பெற்ற இறையியல் கல்லூரிகளில் பெற்றவர்.
- அறிவர். லீ அவர்களின் பிரசங்கங்கள் உலகமெங்கிலும் 220 நாடுகளில் பல கிறிஸ்தவ மற்றும் பொது ஊடகங்கள் வழியாக 24 மணி நேரமும் ஒளிபரப்பப்பட்டு வருகிறது.
- அறிவர். லீ அவர்கள் பெரு, காங்கோ மற்றும் பல ஆப்பிரிக்க நாடுகளின் ஜனாதிபதிகள் மற்றும் அநேக அரசியல் தலைவர்களுக்கு கௌரவ தெய்வீக ஆலோசகராய் செயல்பட்டு வருகிறார்.

*அவரது கிறிஸ்தவ செய்திகள், ஜூங்ஆங் தினத்தந்தி, தடோங்–அ இல்போ, த சியோல் ஷின்முன், த ஹான்கியோரே ஷின்முன், த கொரியா எக்கனாமின் தினதந்தி, த ஷீஷா செய்திகள் மற்றும் கிறிஸ்தவ பத்திரிக்கையில் வெளியாகிறது.*

அவர் அமெரிக்கா; ஜப்பான்; இந்தியா; பாகிஸ்தான்; பிலிப்பைன்ஸ்; அர்ஜென்டினா; ஹோண்டுராஸ், பெரு; ரஷ்யா; ஜெர்மனி; கென்யா; டான்சானியா; உகாண்டா; குடியரசு காங்கோ; இஸ்ரேல்; எஸ்டோனியா மற்றும் உலகத்தின் பல நாடுகளில் படைமுயற்சி கூட்டங்களை நடத்தியுள்ளார்.

அக்டோபர் 10, 1982 அன்று, ஸ்தாபனத்தின் ஆராதனையை ஏறெடுத்தோம். பல தேசங்களில் நடத்தப்பட்ட மிகப் பெரிய படைமுயற்சி கூட்டங்களில் பல வல்லமையான கிரியைகள் வெளிப்படுத்தியதாலும், GCN மூலமாக 170 தேசங்களுக்கும் அதிகமாக வல்லமையான ஊழியத்தை செய்வதாலும் எண்ணற்ற ஆத்துமாக்களை நாம் இரட்சிப்புக்குள் வழிநடத்தியுள்ளோம்.

கூடுதலாக, நாம் 112 புத்தகங்கள் மற்றும் 33 மொழிகளில் செய்தித்தாள்கள் மூலமாக இலக்கிய ஊடக ஊழியப் பணியை பின்பற்றியுள்ளோம். WCDN ஊழியத்தின் மூலமாக, நாம் மருத்துவ பதிவுகளின் அடிப்படையிலே தெய்வீக சுகத்தின் கிரியைகளை நிரூபித்துள்ளோம். மேலும், மான்மின் சர்வதேச கலாசாலை போதகர்களும், திருச்சபை பணியாளர்களும் பரிசுத்த சுவிசேஷத்தினால் தங்களை தரிப்பித்துக்கொள்ளும்படிக்கு அவர்களை பயிற்றுவித்துள்ளது. இவை அனைத்தின் மூலமாக மான்மின் தீவிரமாக உலகளாவிய பணியை நிறைவேற்றியுள்ளது. ஏசாயா 60:1ல் சொல்லப்பட்டபடி, “எழும்பிப் பிரகாசி; உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது.” மான்மின் மத்திய திருச்சபை எப்போதும் எழும்பி பிரகாசித்தது. இப்போது நாம் நம்முடைய திருச்சபை எப்படி தேவனை மகிமைப்படுத்தியது என்பதைப் பார்ப்போம்.

## 1. நாம் தேவனளித்த தரிசனத்தை விசுவாச கண்களோடு பார்த்தோம்

நாம் திருச்சபை துவங்கிய அந்த காலக்கட்டத்தில் தேவன் நமக்களித்த தரிசனம் மிகப் பெரியது. ஆனால் நாம் அற்பமான ‘நிகழ்காலத்தை’ பாராமல் தேவனளித்த தரிசனத்தைப் பார்த்தோம். நாம் நம்முடைய “நிகழ்காலம்” பலவீனமாக அற்பமானதாக இருந்தது என்ற காரணத்தால் சோர்ந்து போகவில்லை. காரணம் நாம் தேவ அன்பையும் அவருடைய வாக்குத்தத்தத்தையும் விசுவாசித்தோம்.

பார்ப்பதற்கு கூடாததாயிருந்தவைகளை செய் என்று தேவன் நம்மை பலவந்தமாய் ஊந்தியபோதும், நம் நல்ல தேவன் நமக்கு கஷ்டகாலத்தை தரமாட்டார் என்பதை விசுவாசித்தோம். மாறாக நம்மைக்குறித்து அவர் மிகவும் நன்றாக அறிந்திருந்தபடியால் நம்மால் நிச்சயம் அடையமுடிகிற இலக்குகளை நமக்குத் தந்தார். கூடவே, நாம் நம்முடைய சுய பெலத்தால் கூடாத காரியங்கள் நம்மை பெலப்படுத்துகிற அவர் மூலமாக கூடும் என்பதையும் விசுவாசித்தோம் (பிலிப்பியர் 4:13).

ஆகவே, தேவன் நமக்கு அத்தனை பெரிதான தரிசனத்தை கொடுத்தபோது, நாம் அவற்றை நன்றியோடும் மகிழ்ச்சியோடும் ஏற்றுக்கொண்டோம். நாம் அதை நம்முடைய இருதயங்களில் நாட்டி இந்த நாள் வரைக்கும் அதை விசுவாசக் கண்களோடு பார்த்து வருகிறோம். அதன் விளைவாக, எபிரெயர் 11:1ல் சொல்லப்பட்டபடி, “விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும்” என்பதுபோல விசுவாசத்தோடு நாம் பார்த்துக் கொண்டிருந்த நம்முடைய தரிசனம் இன்று நிஜமாகியுள்ளது.

மாறாத விசுவாசத்தோடு தேவனளித்த தரிசனத்தை நாம் பார்த்தால், அவர் அதை நிச்சயமாக நிஜமாக்குவார். மனித முறைமைகளாலும் ஆற்றலாலும் கூடாத காரியங்கள் விசுவாசத்தின் மூலமாக நிஜமாக தோன்றும்போது, நாம் தேவனுக்கு மகிமை செலுத்த முடியும். மாறாமல் விசுவாச கன்களோடு அந்த தரிசனத்தை பார்ப்பதற்கு, நாம் அந்த தரிசனத்தில் நம்முடைய சொந்த எண்ணங்களை சேர்க்கக்கூடாது.

நீங்கள் தேவனை நேசித்து, அவர் வார்த்தையைக் கைக்கொண்டு, தேவன் உங்களுக்குச் செய்த அனைத்துக் காரியங்களையும் விசுவாசிக்கும்போது, நீங்கள் ஏற்கனவே கொண்டிருக்கிற விசுவாசத்தோடு மாறாத விசுவாசத்தை பரத்திலிருந்து உங்களுக்கு அருளி அதில் சேர்ப்பார். நீங்களாக கொண்டிருக்கும் விசுவாசத்தோடு தேவனளித்த விசுவாசம் சேரும்போது, உங்கள் தரிசனம் நிஜமாகும், நீங்கள் தேவனை பெரிதாய் மகிமைப்படுத்துவீர்கள்.

## 2. அநுதினமும் நாம் ஜெபத்திலே தேவனை நோக்கி கூப்பிட்டு கொண்டிருக்கிறோம்

நீங்கள் எதையாகிலும் ஒன்றை விசுவாசக் கண்களோடு பார்த்தால், தேவன் உங்களுக்கு அளித்த தரிசனம் நிறைவேறும் என்று நீங்கள் நம்பலாம். மேலும் நீங்கள் உங்கள் தரிசனம் நிறைவேறும் வரைக்கும் அதை விசுவாசக் கண்களோடு பார்த்து, தேவனுக்கு முன்பாக, அவர் உங்களுக்கு வழியையும் வழிநடத்துதலையும் காண்பிக்கும்படிக்கு ஜெபத்தில் அவரை நோக்கி கூப்பிடுவீர்கள். தேவன் பதிலைப் பெறுவதற்கான வழியை உங்களுக்கு காட்டி, அந்த வழியாய் செல்வதற்கு உங்களுக்கு பெலனளிப்பார். நீங்கள் ஊக்கமாக ஜெபிக்கும்போது அவர் எல்லாத் தடைகளையும் உங்களை விட்டு அகற்றுவார். எசேக்கியேல் 36:36–37 சொல்கிறது, “கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன், இதைச் செய்வேன்” மற்றும் “இஸ்ரவேல் வம்சத்தாருக்காக நான் இதை அநுக்கிரகஞ்செய்யும்படி அவர்கள் என்னிடத்தில் விண்ணப்பம் பண்ணவேண்டும்.” இதன் அர்த்தம் தேவன் நமக்காக ஏதோ ஒன்றை அடைய வாக்குத்தத்தம் செய்திருந்தாலும்கூட, நாம் அது நிறைவேறும்வரைக்கும் விசுவாசத்துடன் ஜெபிக்க வேண்டும்.

ஆகவேதான் நம்முடைய திருச்சபை அங்கத்தினர்கள் சபை ஆரம்பித்ததிலிருந்து அநுதினமும் கூடி சபையில் ஜெபித்து வருகிறார்கள். இப்படிச் செய்வதால், நாம் தேவனுடைய மற்றும் ஆண்டவருடைய சித்தத்தை நிறைவேற்றியுள்ளோம். காலங்கள் செல்ல நாம் அதிக ஊக்கமாக ஜெபித்து வருகிறோம்.

தேவன் நமக்கு மிகப் பெரிய தரிசனத்தைக் கொடுத்திருந்தாலும்கூட, ஆரம்பத்திலிருந்து அதற்கான விவரங்களை கொடுக்கவில்லை. நாம் நம்முடைய தரிசனத்தை விசுவாசத்தோடு பார்த்துக்கொண்டிருந்தாலும்கூட, சில நேரங்களில் பெரிய பனிமூட்டம் மறைந்திருப்பது போல நமக்கு முன்பாக உள்ளவைகளை தெளிவாக பார்க்க முடியவில்லை. சில நேரங்களில் நாம் நம்மால் ஏற முடியாத அளவு உயரமான மலைகளையும் நம்மால் கடக்க முடியாத நதிகளையும் சந்தித்துள்ளோம்.

ஆனால் நாம் ஜெபத்தில் தேவனை நோக்கி கூப்பிட்டபோது, மலை போன்ற பெரிய தடைகள் நம்மை விட்டு விலகின; ஆறுகள் உலந்துபோயின. ஆகவே நாம் அவைகளை எளிதாக வெட்டாந்தரையைப் போல கடக்க முடிந்தது. மேலும் இருண்ட கால்வாயை கடந்து போவது போல பல வழிகளில் வேதனைப்பட்டுள்ளோம். ஆனால், நாம் தேவனை நோக்கி ஜெபத்தில் கதறி அழுதபோது, நாம் எந்த ரீதியிலும் சேதப்படவில்லை, ஆனால் பிற்பாடு இது ஒரு குறுக்குவழி என்பதை நாம் உணர்ந்துகொண்டோம்.

எரேமியா 33:3ல் வாசிக்கிறோம், “என்னை நோக்கி கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்.” சில நேரங்களில் நாம் நம்முடைய ஜெபத்தில் பதிலைப் பெற்றுக்கொள்ளும் வரைக்கும் போராட வேண்டியுள்ளது. இந்த ஜெபங்கள் அனைத்தின் மூலமாகவும், நம்முடைய உண்மையுள்ள தேவன் இந்த மகிமையான நிலையை நாம் அடையும்வரை நம்மை வழிநடத்தியுள்ளார்.

ஆகவே விசுவாசத்தில் உங்கள் இலக்குகளை அடையப்பெறுவதற்கு ஜெபம் என்பது மிக அவசியம் என்பதை நீங்கள் உணர்ந்து, உங்கள் ஜெபத்தில் தேவனை நோக்கி கதறி கூப்பிட்டு, பதில்களைப் பெறும்படி உங்களை ஊக்கப்படுத்துகிறேன்.

## 3. கனிகளை விளைவிக்க செய்ய அனுமதித்த தேவனை நாம் முற்றிலும் சார்ந்துகொண்டோம்

ஒரு விவசாயி கடுமையாக உழைத்தாலும்கூட, சூரிய ஒளியும் மழையும் இல்லாமல் அவர் எதையும் அறுவடை செய்ய முடியாது. கனிகள் விளைந்திருந்தாலும், புயல் சூறாவளி உட்பட இயற்கை சீற்றங்களின் காரணத்தால் அவைகள் ஒன்றுமில்லாமல் போய் விடும்.

எல்லாவற்றிற்கும் மேலாக கனிகள் விளைவதால் முன் மாரியையும் பின் மாரியையும் போதிய அளவு சூரிய வெளிச்சத்தையும் காற்றையும் தேவன்தான் தருகிறார். அதுபோல, நாம் தேவனுடைய வார்த்தையின்படி செயல்பட்டு, ஜெபத்திலே கதறி கூப்பிட்டாலும்கூட, பதில் தேவனிடத்திலிருந்து மட்டும்தான் வரும்.

நீதிமொழிகள் 16:1 சொல்கிறது, “மனதின் யோசனைகள் மனுஷனுடையது; நாவின் பிரதியுத்தரம் கர்த்தரால் வரும்” என்று. ஆகவே, நாம் நம்முடைய பகுதியை செய்வதற்கு நம்முடைய

### விசுவாசத்தின் அறிக்கை

**1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.**
**2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்**
**3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.**
**4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.**
**5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை “அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்” மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.**

**“எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் (தேவன்)…” (அப். 17:25)**
**“அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” (அப். 4:12)**

சிறப்பை முயற்சிக்க வேண்டும். ஆனால் அதே நேரத்தில், நாம் பதில் தேவனிடத்திலிருந்து மட்டுமே வருகிறதென்பதை நம்முடைய இருதயத்தின் ஆழத்தில் புரிந்துகொண்டு, தேவனை முற்றிலுமாய் நாம் சார்ந்துகொள்ள வேண்டும். நாம் தேவனை முற்றிலும் சார்ந்துக்கொண்டால், அவர் நாம் பெரிய மற்றும் மிக அபரிதமான கனிகளை எதிர்பார்த்ததற்கும் அதிகமாக விளைவிக்கும்படி செய்வார். அதனால் நாம் தேவனுக்கு மிகப் பெரிய மகிமையை ஏறெடுக்க முடியும்.

நாம் 7 டாலர் வைத்து சபை ஆரம்பித்திருந்தாலும் தொடர் தேர்ச்சியாக வளர்ந்து கொண்டிருக்கிறோம். தற்போது 11 ஆயிரம் கிளை மற்றும் இணை சபைகளோடு பணிபுரிந்து வருகிறோம். இந்த வளர்ச்சி கிரமத்தின் வழியாக முழுவதும், நாம் ஜெபத்தில் தேவனிடத்தில் நம்முடைய அர்ப்பணம், நம்முடைய இருதயம், மனம் உட்பட எல்லாவற்றையும் ஒப்புக் கொடுத்தோம். நாம் அப்படிச் செய்ததால், தேவன் ஒன்றன்பின் ஒன்றாக நாம் கனிகொடுக்கும்படி செய்தார்.

நாம் அயல் தேசத்து படைமுயற்சி 2000தில் நடத்த ஆரம்பித்த போது, தேவன் நாம் நன்கு அறியாத தேசங்களுக்கு நாம் போக வேண்டும் என்று நம்மிடம் சொன்னார். அங்கு ஒரு போதகர்களையும் நாம் அறியவில்லை; நம்மை யாரும் அங்கு அழைக்கவுமில்லை. ஆனால் நாம் தேவனுக்கு கீழ்ப்படிந்து அங்குச் சென்றபோது, நமக்காக தேவன் ஆயத்தம் செய்தவர்கள் மூலமாக படைமுயற்சி கூட்டங்களை வெற்றிகரமானதாக்கினார். தேசிய தொலைக்காட்சி நிலையங்கள் மற்றும் மற்ற பல ஒளிபரப்பு ஊடகங்கள் படைமுயற்சி கூட்டங்களை ஒளிபரப்பின. தேவன் வழியை ஆயத்தம் செய்தார், அவைகளை வெளியிட்டார்; அவைகளிலே கிரியை செய்தார்.

தேவன் ஆயிரக்கணக்கான லட்சக்கணக்கான ஏன் கோடிக்கணக்கான கூட்டமான மக்களை படைமுயற்சி கூட்டங் களிலே கூட்டிச் சேர்த்தார். நாம் சிருஷ்டிகராகிய தேவனையும், ஏன் இயேசு கிறிஸ்து ஒருவரே நம்முடைய இரட்சகர் என்பதின் காரணங்களையும் விவரித்து, வேதாகமம் உண்மை என்பதை ஆதரிக்க பரலோகம் மற்றும் நரகத்தின் இருப்பையும் விவரித்து பிரகடனப்படுத்தினோம். எண்ணற்ற மக்கள் கிறிஸ்தவர்களாக மாறினார்கள். தொலைக்காட்சியின் மூலமாக படைமுயற்சி கூட்டங்களில் பங்குப்பெற்றவர்களும்கூட ஆகாயத்தையும் காலத்தையும் கடந்து, தங்கள் வியாதிகளிலிருந்து சுகம் பெற்றார்கள்.

நிஜத்தில், தேவனுக்குக் கீழ்ப்படிவது பார்ப்பதற்கு கூடாத காரியம் போல தோன்றியது. ஆனாலும் நாம் கீழ்ப்படிந்து, தேவன் நம்மை போகச் சொன்ன போது, நாம் சென்றோம். சிருஷ்டிகராகிய தேவனையும் இயேசுகிறிஸ்துவையும் பிரகட னப்படுத்தி, பரிசுத்த ஆவியின் வல்லமையை வெளிப்படுத்தினோம். இது அற்புதங்களையும் அடையாளங்களையும் பார்த்தாலொழிய விசுவாசியாத தலைமுறை. ஆகவே, வல்லமை நிறைந்த கிரியைகள் மூலம் எண்ணற்ற மக்கள் ஆண்டவரை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்று, இரட்சிப்பை அடைந்தார்கள். இது நம்முடைய சொந்த ஞானம் மற்றும் முறைமைகளினால் அல்ல, நாம் தேவனை முற்றும் சார்ந்து அவருக்கு கீழ்ப்படிந்ததாலேயே சாத்தியமாயிற்று. தேவன்தாமே நம்மை வழிநடத்தினார். ஆகவேதான் மான்மினாகிய நாம் தேவனுக்கு எல்லா மகிமையையும் ஏறெடுக்க முடிந்தது.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, யோவான் 11:40ல் வாசிக்கிறோம், “நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா என்றார்?” மரித்தோரை உயிரோடெழுப்புகிற ஆண்டவரை விசுவாசித்து கீழ்ப்படிந்து, அப்படிச் செய்வதால் நீங்கள் எதைக் கேட்டாலும் பெற்று தேவனுக்கு மகிமை செலுத்தும்படிக்கு ஆண்டவருடைய நாமத்தில் உங்களுக்காய் ஜெபிக்கிறேன்.

# ஜெபத்தினாலும் கீழ்ப்படிதலினாலும் மான்மின் இஸ்ரவேலுக்கான தேவனுடைய அநாதி திட்டத்தை நிறைவேற்றியது






















**இஸ்ரேல் தேசத்திற்கு மூன்று வருடங்களில் மேற்கொண்ட 12 பயணங்கள்**




சபை 1982ல் திறந்தபோது, நாம் முடிவு காலத்தில் தேவன் தெரிந்துகொண்ட இஸ்ரவேலர்களுக்கு சுவிசேஷத்தைப் பரப்பு வோம் என்று தேவன் சொன்னார். இதன் அர்த்தம் சுவிசேஷம் தனது பிறப்பிடமான இடத்திற்கு தற்போது இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கிற யூதர்களிடத்திற்கு திரும்பி செல்லும். மேலும் இது அவர்கள் மனந்திரும்பும் காலம் வருகிறது என்பதை அர்த்தப்படுத்துகிறது.

ஆகவே, தலைமைப் போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்கள் மாறாத இருதயத்தோடும், தேவனுடைய சித்தத்திற்காக இஸ்ரவேல் ஊழியத்தை விசுவாசத்தோடும் ஜெபத்தோடும் செய்தார். இறுதியாக, ஜூலை 25, 2007ல் திருச்சபையின் 25வது வருடத்தில், அவர் இயேசுவானவர் வளர்ந்த நாசரேத்தில் முதல் கூட்டத்தை நடத்தினார் (படம் 1).

அதன்பின்பு துவங்கி, அவர் மூன்று வருடங்களுக்கு மேலாக 12 முறைகள் ஹைஃபா, பெத்லகேம் (படம் 2), ஆஸ்தோத் (படம் 3), எருசலேம், அஸ்கலோன், பெயர்செபா, யிலாத், தெல்அவிவ், நகாரியா, ஹதேரா மற்றும் அஃபுலா போன்ற இடங்களில் கூட்டங்களை நடத்தினார். அவர் ஜெபத்தின்மூலமாக வல்லமையான கிரியைகள் நிகழ்த்தினார். அதன்மூலம் அநேக மக்கள் புற்றுநோய், இருதய வியாதிகள் மற்றும் மன அழுத்தங்கள் போன்ற வியாதிகளிலிருந்து சுகமாயினர். மேலும் அவர் தேவனுடைய அன்பை பகிர்ந்தார். அது இஸ்ரவேலின் உயர்ந்த பதவி யிலுள்ளவர்களை மட்டுமல்ல பாரம்பரிய யூதர்களையும் சென்றடைந்தது.

இஸ்ரவேலின் அரசியல் சாசனம், மத சுதந்திரத்தை அங்கீகரித்–துள்ளது. ஆனால் மூக்கால்வாசிபேர் அங்கு யூதர்கள்தான். அறிவர். லீ மற்றும் திருச்சபையின் பணித்தள குழு முதல் முறை இஸ்ரவேலை சந்தித்தபோது மெசியானிக் யூதர்கள் மிக குறைந்த எண்ணிக்கையுள்ளவர்கள் மட்டுமே இருந்தனர். அவர்கள் சமூகரீதியாக புறக்கணிக்கப்பட்டு இருந்தனர். போதகர்கள்கூட தொடர்ந்து இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தை செய்வது தேவச் சித்தம் தானா என்று வியந்து கொண்டிருந்தனர்.

இருப்பினும், அறிவர். லீ அவர்களது ஊழியம் அவர்களை ஊக்கப்படுத்தியது. இஸ்ரவேலின் போதகர்கள் ஐக்கியமான கிறிஸ்டல் ஃபோரத்தை (இஸ்ரேலிய போதகர்கள் சங்கம்) ஒருங்கிணைத்தனர். 2009ம் ஆண்டு செப்டம்பர் 6 மற்றும் 7ம் தேதிகளில் அவர்கள் அறிவர். லீ அவர்களை அழைத்து எருசலேம் மையத்திலே இஸ்ரேல் ஐக்கிய படைமுயற்சி கூட்டத்தை நடத்தினர். அவர் தைரியமாக, இயேசு ஒருவர் மட்டுமே நம்முடைய இரட்சகர் என்று பிரகடனப்படுத்தினார். இந்த படைமுயற்சி கூட்டத்தில் மெசியானிக் யூதர்கள் மட்டுமல்ல பாரம்பரிய யூதர்களும் பங்குப் பெற்றனர். 220க்கும் மேற்பட்ட தேசங்களுக்கு ஒளிபரப்பப்பட்டது (படம் 4 முதல் 7).

இதன்விளைவாக, அதிகமதிகமாக சுவிசேஷத்தின் கனி விளைந்துள்ளன. கிறிஸ்டல் ஃபோரம் வருடா வருடம் கிறிஸ்டல் இசைத் திருவிழா மற்றும் கருத்தரங்குகளை தீவிரமாக நடத்தி ஊழியம் செய்து வருகிறது. அறிவர். லீ அவர்கள் ஜெபித்ததான கைக்குட்டை ஜெபத்தின் மூலமாக (அப். 19:11–12), அவர்கள் சுகத்தையும் பதிலையும் அனுபவித்துள்ளனர். கிறிஸ்டல் ஃபோரத்திற்கு கீழாக இருக்கும் சபைகள் எழுப்புதலை அனுபவித்–துள்ளன. தற்போது நாம் 14 கிளை மற்றும் 19 இணை சபைகளை இஸ்ரவேலில் கொண்டுள்ளோம்.

பார்ப்பதற்கு எளிமையாக இல்லாத இஸ்ரேலிலே தம்முடைய வல்லமையாலும் அன்பாலும் இதுவரை ஊழியத்தை நிறைவேற்றும்படி வழிநடத்திய தேவனுக்கு சகல நன்றிகளையும் மகிமையையும் செலுத்துவோம்.



# நான் புதுப்பிக்கப்பட்டதால் ஒரு மதிப்புமிக்க பல்கலைக்கழகத்திற்குச் செல்ல முடிந்தது!

சகோதரர் சியொன்மின் கிம், வயது 22,
இளம் வாலிபர்கள் குழு, மான்மின் தலைமை சபை

நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தவன், ஆனாலும் என் நண்பர்களோடு சேர்ந்து சுற்றுவதே எனக்கு மிகவும் பிடிக்கும். நான் வளர்ந்தபோது, ஒரு மாணவனாய் நான் செய்யக்கூடாதவற்றை எவ்வித தயக்கமுமின்றி செய்தேன். நான் பள்ளியை விட்டு வெளியேற்றப்படுவதை தவிர்த்து மற்ற எல்லா தண்டனைகளையும் பள்ளியில் பெற்றேன். நான் நன்றாய் படிக்கவேமாட்டேன். ஒருமுறை தேர்வில் தூங்கிவிட்டதால் பூஜ்ஜியம் மதிப்பெண் எடுத்தேன். என் பள்ளியில் எப்பொழுதும் நான்தான் கடைசி தரமதிப்பெண்ணை பெறுகிறவனாய் இருந்தேன்.

எப்படியிருந்தாலும், என்னைப் போன்ற ஒருவனுக்கு தேவ கிருபை அருளப்பட்டது, அந்த நாள் முதல் என் வாழ்க்கை முற்றிலும் மாறியது. மே 16, 2014 அன்று, நான் 11ம் வகுப்பு படித்து கொண்டிருந்–தபோது, தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்கள் திருச்சபை விசுவாசிகள் செய்த பாவங்களுக்காக அவர்களுக்குப் பதிலாக தேவனிடத்தில் மனந்திரும்புதலின் ஜெபத்தை ஏறெடுத்தார். அப்பொழுது நான் அதிகமாய் தொடப்பட்டேன்; அவர் என்னைப் போன்றவனையும் நேசிக்கிறார், ஆதரிக்கிறார் என்று எண்ணினேன். அவருடைய இந்த உண்மையான அன்பு என்னுடைய இருதயத்திற்குள் வந்ததால், என் கடந்தகால தவறுகளிலிருந்து நான் மனந்திரும்ப ஆரம்பித்தேன்; மீண்டும் புதிய வாழ்க்கையை வாழ பெலனைப் பெற்றுக்கொண்டேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக, திருச்சபையில் கொடுக்கப்படும் தேவசெய்திகளை கேட்பதில் அதிக கவனம் செலுத்தினேன், ஜெபித்தேன். ஆவிக்குரிய காரியங்களைப் பெற்றுக்கொள்ள இப்படியாக ஒன்றன்பின் ஒன்றாக நான் முயற்சி செய்ய ஆரம்பித்ததால், நான் நன்றாய் படிக்கவும் நல்லவைகளை கற்றுக் கொள்ளவும் விரும்பினேன். இதற்கு முன்பு இப்படிப்பட்ட ஒரு எண்ணமோ ஆர்வமோ எனக்கு ஏற்பட்டதேயில்லை.

நிஜத்தில், இதற்கு முன்பு நான் படித்ததே இல்லை. நான் முயற்சி செய்த ஆரம்பத்தில் என் மதிப்பெண் உயரவில்லை. ஆனால் நான் 12ம் வகுப்பு படித்தபோது, என் மதிப்பெண்கள் தொடர்ந்து அதிகரித்தது. ஆனால், நான் கல்லூரி கல்வியியல் திறன் தேர்வில் நன்றாய் எழுதாமல் போய்விட்டேன். இருந்தாலும், மீண்டும் ஒழுங்காக படிக்க முயற்சிப்பதே மகிழ்ச்சியான ஒரு விஷயம் என தேவனுக்கு நன்றி சொன்னேன். எனவே நான் படிப்பதில் சற்றே முயற்சி செய்தால் கல்லூரி நுழைவுத் தேர்வில் இன்னும் சிறப்பாக செயல்பட முடியும் என்று யோசித்தேன். எனவே அந்த தேர்வுக்காக இன்னும் ஒரு ஆண்டு படிக்க என் பெற்றோர்களிடம் கேட்டபோது, அவர்கள் சரி என்று சொன்னார்கள்.

நான் படிப்பதில் அதிக கவனத்தைச் செலுத்தவும், என் உலக நண்பர்களோடு என்னுடைய பழக்கத்தை நிறுத்தும்படியும் 2G அலைபேசியை பயன்படுத்த ஆரம்பித்தேன். நான் கடினமாக படித்தேன். மற்ற மாணவர்கள் தனியார் அகடாமியில் இணைந்து ஞாயிற்றுக்கிழமை கூட படித்தபோது, நான் தேவன் கட்டளை யிட்டபடி கர்த்தருடைய நாளை முழுமையாக ஆசரிக்க ஞாயிறு காலை, மாலை ஆராதனைகளிலும் பங்குப்பெற்றேன்.

நான் படித்த அகடாமியில் வாரநாட்களில் வகுப்புகள் இரவு 10 மணிக்குப் பிறகு தான் முடியும். ஆனாலும் நான் நம்முடைய சபையில் தினசரி நடைபெறும் தானியேல் ஜெபக்கூட்டத்தில் வாரத்திற்கு மூன்று முறை பங்குப்பெற்றேன். உண்மையில், நடுஇரவு ஜெபக்கூட்டத்திற்கு படித்துவிட்டு வந்து பங்குப்பெறுவது கடினமான ஒன்றுதான். ஆனாலும், தலைமை போதகர் அவர்களின் ஜெபம், நான் தொடர்ந்து ஜெபக்கூட்டத்தில் பங்குப்பெற எனக்கு உதவியது.

அவர் எப்பொழுதும் மாணவர்களிடத்தில் தம்முடைய அன்பையும், அக்கறையையும் காண்பித்தார். எங்கள் எதிர்கால வாழ்க்கைக்கான கனவையும் தரிசனத்தையும் தந்தார். கல்லூரி நுழைவு தேர்வுக்கு முன்பதாக அவர் தேர்வு எழுதப்போகும் மாணவர்களுக்காக ஜெபித்தார். அவருடைய ஜெபத்தின் வல்லமையை நான் விசுவாசித்ததால், நான் தோல்வியடையமாட்டேன் என்று முழு நிச்சயமாய் நம்பினேன். இதனால்தான் எல்லா நேரத்திலும் என்னால் தைரியத்தோடு படிக்க முடிந்தது.

இறுதியாக, நான் கல்லூரி கல்வியியல் திறன் தேர்வை எழுதினேன். அதில் 2016ம் ஆண்டு எழுதியவர்களிலேயே மூன்றாவது இடத்திற்கு வந்தேன். 2017ல் முடிவாக, நான் கொரிய பல்கலைக்கழகத்தில் கலை மற்றும் வடிவமைப்பு துறையில் சேர்க்கைப் பெற்றேன்.

நான் கல்லூரிக்குச் சென்ற பிறகு, நான் நினைத்ததைப் போல என் கிறிஸ்தவ வாழ்க்கையை என்னால் சரியாக வாழ முடியவில்லை; ஏனென்றால், புதிய சூழ்நிலை புதியவர்கள் என்னைப் புரிந்துகொள்ள நேரமானது. இதற்கிடையில், என் குடும்பத்தினர் தலைமை போதகரை சந்திக்கும் ஒரு வாய்ப்பு ஏப்ரல் 1, 2108 அன்று கிடைத்தது. அந்த நேரத்தில் நான் அவரை பார்த்தேன், அவருடைய அன்பை உணர்ந்தவனாய் கண்ணீர் சிந்த துவங்கினேன்.

தேவன் நான் உணர்வில்லாமல் பாவம் செய்து கொண்டிருப்பதை உணர்த்தினார். நான் என் மனதில் மீண்டும் தீர்மானம் எடுத்தேன், ஆவியானவரின் நிறைவினால் பாடவும் துதிக்கவும் தொடங்கினேன். தேவன் எனக்காக காத்திருந்ததை உணர்ந்தேன்; ஒரு நீர்வீழ்ச்சி கொட்டுவதைப் போல தேவன் என்மேல் ஆவியானவரின் கிருபையை ஊற்றினார்.

என் சிறு வயதிலிருந்து ஒரு கிறிஸ்தவ பிள்ளையாய் நான் வளர்ந்தபோதிலும், கர்த்தருடைய அன்பை நான் ஒருபோதும் உணர்ந்தே இல்லை. எனினும், என் தலைமை போதகர் மூலமாக கர்த்தருடைய அன்பை உணர்ந்துகொண்டேன், என் வாழ்க்கையும் மாறியது. நான் சிலசமயங்களில், “தேவனுடைய கிருபையினால் நான் மாற்றப்படாமல் இருந்திருந்தால் என்னவாகியிருக்கும்? பழைய வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தால் எதிர்காலத்தில் நான் எப்படிப்பட்டவனாய் மாறியிருப்பேன்?” என்று யோசிப்பதுண்டு. தேவனுடைய கிருபையை பெறாமல் என் வாழ்க்கை எப்படி போயிருக்கும் என்பதை யோசிப்பதே எனக்கு பயத்தை கொண்டு வரக்கூடியதாய் இருந்தது.

வாழ்கையின் உண்மையான மதிப்பை உணரச் செய்து, ஒரு ஆசீர்வாதமான வாழ்க்கையை வாழ என்னை நடத்திய தேவனுக்கே சகல நன்றிகளையும் மகிமையையும் செலுத்துகிறேன். என்னை புதிதாக மாற்றிய என் தலைமை போதகருக்கும் என் இதயங்கனிந்த நன்றிகளை செலுத்துகிறேன்.



# “இரத்தகொதிப்பு, குடிப்பழக்கம் போன்ற என்னுடைய எல்லா பிரச்சனைகளும் தீர்க்கப்பட்டது!

என்னுடைய 14வது வயதிலிருந்து இரத்தக் கொதிப்பிற்காக நான் மாத்திரைகளை உட்கொள் கிறேன். என்னுடைய திருமணத்திற்கு பிறகு, கருச்சிதைவு உண்டானது. இதனால் மன வேதனையடைந்த நான் மது குடிக்க ஆரம்பித்தேன்; அதுவே என்னுடைய பழக்கமாக மாறிவிட்டது. நான் மரிப்பதைப் போலவும், பித்துப் பிடித்த–வளைப்போலவும் மாறினேன். என்னால் எதையும் சாதகமாக யோசிக்க முடியவில்லை, அதிகமாய் நான் வேதனைப்பட்டேன்.

நான் ஒரு சிறு காரியத்திற்குகூட திடுக்கிட்டு, கோபப்பட ஆரம்பித்தேன். இப்படியாக நான் உணர்ச்சிவசப்படக்கூடியவளாய் இருந்தேன். நான் நாளடைவில், இத்தகைய சூழ்நிலைகளால் அவதிப்பட்டதால், என் குடும்பம் எப்பொழுதும் குழப்பத்தில் இருந்தது. நான் அடிக்கடி என்னைப் பாதுகாக்க வேண்டும் என்று தேவனிடத்தில் ஜெபத்தில் கேட்டேன்.

செப்டம்பர் 2017ல், என்னுடைய சிநேகிதி வீட்டில் மிஷனரி ஜேன் மபோலோகாமா நடத்திய ஜெபக்கூட்டத்தில் பங்குப் பெறும்படி சென்றேன். அவள் தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்கள் தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்–தக்கூடிய ஒரு வல்லமையான போதகர் என்றும், அவர் ஜெபித்துக்கொடுத்த கைக்குட்டையில் (அப். 19:11–12) தேவனுடைய வல்லமை அடங்கியிருப்பதாகச் சொன்னாள். கூடுதலாக, நான் மூவான் மதுர தண்ணீரை (யாத். 15:25) குறித்தும் கேள்விப்பட்டேன். அவள் என்னை ஞாயிற்றுக்கிழமை ஆராதனையில் பங்குப் பெறும்படி அழைத்தாள்.

அடுத்த ஞாயிற்றுக்கிழமையே நான் லண்டன் மான்மின் சபையின் ஆராதனையில் பங்குப்பெற்று, ஜெபத்தையும் பெற்றுக்கொண்டேன். பிறகு, எனக்குள்ளிருந்து ஏதோ ஒன்று வெளிவருவதை உணர்ந்தேன். அதுமுதற்கொண்டு, நான் தொடர்ச்சியாக ஞாயிற்றுக்கிழமை ஆராதனைகளில் பங்குப்பெற்று, மிஷனரியின் கைக்குட்டை ஜெபத்தைப் பெற்றுக்கொண்டு வந்தேன். இதற்கிடையில், என்னுடைய சிறு வயதிலிருந்து எனக்கு அதிக தொந்தரவை ஏற்படுத்திக் கொண்டிருந்த இருளின் ஆதிக்கத்திலிருந்து முற்றிலும் நான் விடுதலைப் பெற்றேன். அல்லேலூயா!

இப்பொழுது எனக்கு எதிர்மறை யான எண்ணங்கள் வருவதே யில்லை. நான் சமாதானத்தை உணர்ந்ததால், என் குடும்பமும் சமாதானத்தில் வாழ ஆரம்பித்தது. நான் இரத்தக் கொதிப்பு மற்றும் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலைப் பெற்றேன். என்னுடைய மாற்றத்–தைப் பார்த்த என் குடும்பமும், என் நண்பர்களும் ஆச்சரியம டைந்தனர். என் கணவரும், மகனும் மான்மின் அங்கத்தினர் களாய் பதிவு செய்தனர்!



சகோதரி ஜூலியானா நமுகாசா,
லண்டன் மான்மின் சபை,
வயது 44, இடமிருந்து மூன்றாவது நபர்

நான் லண்டன் மான்மின் சபையில் பங்குப்பெற துவங்கிய நான்கு வாரங்களிலேயே என்னுடைய வாழ்க்கை யானது முற்றிலும் மாறியது. சர்வவல்லமையுள்ள தேவன் என் உயிரை காப்பாற்றினார். நான் இப்பொழுது கர்த்தருக்குள் மிகுந்த சந்தோஷமாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கிறேன். தலைமை போதகரை சந்திக்கும்படி என்னை வழிநடத்திய தேவனுக்கே சகல நன்றிகளையும் மகிமையையும் நான் செலுத்துகிறேன்.

GCN Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com